பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 08 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டை வலிமையாக்கும் நோக்கில் கொள்கைகளும், சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சுதந்திர தினம் பண்பாட்டு விழாவாகவும், எதிர்கால வளர்ச்சியை திட்டமிடும் விழாவாகவும் கொண்டாடப்படுவதாக தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. சுதந்திர தினத்தையொட்டி, தமிழகத்தில் கிராம சபை கூட்டங்கள் - நடைபெற்று வருகின்றன.

4. ஆப்பிரிக்க நாடுகளில் குரங்கு அம்மை நோய் பாதிப்பை தடுக்கும் வகையில் உலக சுகாதார அமைப்பு நிதியுதவியை வழங்கியுள்ளது.

5. 18 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மகளிர் **Hand Ball** சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று பிரேசிலை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>>

நாட்டின் 78-வது சுதந்திரதினம் நாடு முழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

வரலாற்று சிறப்பு மிக்க தில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு நரேந்திரமோடி தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார்.

நாட்டு மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்த பிரதமர், நாட்டை வலிமையாக்கும் நோக்கில் கொள்கைகளும், சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

நாம் இன்று சுதந்திர காற்றை சுவாசிக்க விடுதலை போரில் ஈடுபட்டவர்களின் தியாகங்களே காரணம் என்று அவர் நினைவுகூர்ந்தார்.

1857 சுதந்திர போருக்கு முன்பே நாட்டின் பல்வேறு பகுதிகளில் பழங்குடியின மக்கள் சுதந்திரத்திற்காக போராடியதாக பிரதமர் தெரிவித்தார்.

தற்போது பாதுகாப்புத்துறையில் நாடு சுயசார்பு நிலையை அடைந்து வருவதாக தெரிவித்த பிரதமர், பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் தனித்துவமான அடையாளத்தை இந்தியா உருவாக்கியிருப்பதாக குறிப்பிட்டார்.

நாட்டில் பல்வேறு துறைகளில் முதலீடு செய்ய உலகின் பல்வேறு நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருவதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

முதலீட்டாளர்களை கவரும் வகையில் மாநில அரசுகள் தெளிவான கொள்கைகளை வகுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

2047-ல் உலகின் உற்பத்தி மையமாக இந்திய உருவெடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்சசி அடைந்த பாரதம் என்பது வெறும் வெற்று முழக்கம் அல்ல 140 கோடி மக்களின் கனவு என்று குறிப்பிட்ட பிரதமர், வளர்ச்சியடைந்த பாரத்திற்காக நாட்டு மக்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திறன்பெற்ற இளைஞர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

நாட்டில் இரண்டு கோடியே 50 லட்சம் குடும்பங்களுக்கு புதிதாக மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் காரணமாக மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகளுக்கு எளிதில் வங்கிக்கடன் கிடைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மாற்றங்கள் அரசியலுக்கானவை அல்ல என்றும் அவை, நாட்டின் முன்னேற்றத்திற்கானவை என்று அவர் கூறினார்.

சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக்கு ஒன்பது லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விண்வெளித்துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் காரணமாக அதிக அளவிலான செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டு வருவதாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

முன் எப்போதும் இல்லாத வகையில் வடகிழக்கு மாநிலங்கள் வளர்ச்சியின் புதிய உச்சங்களை தொட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காலனி ஆதிக்க காலத்தில் இருந்த பழைய சட்டங்கள் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதையும் திரு நரேந்திரமோடி சுட்டிக்காட்டினார்.

புதிய தேசிய கல்விக் கொள்கையில் தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் மருத்துவ படிப்புக்கான இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், இது மேலும் அதிகரிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இயற்கை உணவுகளுக்கான தேவை உலகம் முழுவதும் அதிகரித்து வருவதாகவும், இந்த உணவு வகைகளின் முக்கிய மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்காக பட்.ஜெட்டில் ஒரு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மூன்றாவது முறையாக நாட்டிற்கு பணியாற்றும் வாய்ப்பை வழங்கிய மக்களுக்கு தாம் அர்ப்பணிப்புடன் தொடர்ந்து சேவையாற்ற உறுதிபூண்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

இந்த விழாவில், மத்திய அமைச்சர்கள், திரு ராஜ்நாத் சிங், திரு அமித்ஷா, திரு ஜெ பி நட்டா உள்ளிட்ட பல தலைவர்கள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

நாட்டின் 78-ஆவது சுதந்திர தினத்தையொட்டி, வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களில் இன்று சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பங்களாதேஷில் உள்ள இந்திய தூதரகத்தில் இந்திய தூதர் திரு பிரணாய் வர்மா தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆற்றிய உரையின் சில பகுதிகளை அவர் வாசித்தார்.

சில்கட், குல்னா, சட்டோகிராம், ராஜ்சஹி-யில் உள்ள துணை தூதரகங்களிலும் இன்று சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

**<<<<<<>>>>>>**

சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, இந்திய மக்களுக்கு உலகத்தலைவர்கள் பலர் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்தியாவின் பன்முகத்தன்மையையும், செழிப்பான கலாச்சாரத்தையும் அமெரிக்கா கொண்டாடுவதாக தெரிவித்துள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையிலான ஒத்துழைப்பு வேகமாக முன்னேற்றம் கண்டு வருவதாகவும், இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் நிலையான வெளிப்படையான, சுதந்திரமான வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் இருநாடுகளும் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினத்தையொட்டி, இஸ்ரேல் வாழ்த்து தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கான அந்நாட்டின் தூதர் **Naor Gilon** புதுதில்லியில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பங்கேற்றார்.

**<<<<<<>>>>>>**

சுதந்திர தினத்தையொட்டி, மாநிலங்களின் தலைநகரங்களில் அந்தந்த மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர்.

உத்திரபிரதேசத்தில் திரு யோகி ஆதித்யநாத்தும், ஆந்திராவில் திரு சந்திரபாபு நாயுடுவும், பீகாரில் திரு நிதிஷ்குமாரும், தேசிய கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினர்.

ஒடிஷாவில் திரு மோகன் சரண் மாஜி தேசியக்கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

அஸ்ஸாமில் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா தேசியக்கொடியை ஏற்றினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய முதலமைச்சர், மூவர்ணக்கொடி நாட்டின் பன்முகத்தன்மையின் அடையாளமாக விளங்குவதாக தெரிவித்தார்.

சுதந்திர தினம் பண்பாட்டு விழாவாகவும், எதிர்கால வளர்ச்சியை திட்டமிடும் விழாவாகவும் கொண்டாடப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

விடுதலை போரில் ஈடுபட்ட தியாகிகளை நினைவுகூறும் வகையில், அவர்களுக்கு தமிழக அரசு நினைவு சின்னங்கள் அமைத்து போற்றி வருவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் பல துறைகளில் தமிழகம் வளர்ச்சியடைந்திருப்பதாக தெரிவித்த முதலமைச்சர், மாணவர்களின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

முதல்வர் மருந்தகம் என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என்றும், வரும் பொங்கல் பண்டிகையையொட்டி முதல்கட்டமாக மாநிலம் முழுவதும் ஆயிரம் மருந்தகங்கள் திறக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

மேலும், 2026-ஆம் ஆண்டுக்குள் 75 ஆயிரம் அரசு பணியிடங்கள் நிரப்பப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டர்.

முன்னதாக காவல் துறையினரின் அணி வகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு மாநில அரசின் விருதுகளையும் திரு மு க ஸ்டாலின் இந்நிகழ்ச்சியில் வழங்கினார்.

மாவட்டங்களின் தலைநகரங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

மத்திய – மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் சுதந்திர தினவிழா கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெற்று வருகின்றன.

சென்னை அகில இந்திய வானொலி நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அதன் துணை தலைமை இயக்குனர் திரு பாண்டி தேசிய கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்.

சுதந்திர தினத்தையொட்டி, தமிழகம் முழுவதும் கிராம சபை கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

<<<<<<>>>>>>

ஆப்பிரிக்க நாடுகளில் குரங்கு அம்மை நோய் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒன்று புள்ளி ஐந்து மில்லியன் அமெரிக்க டாலரை உலக சுகாதார அமைப்பு வழங்கியுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய உலக சுகாதார அமைப்பின் இயக்குனர் திரு டெட்ரோஸ் அதானம், வரும் நாட்களில் கூடுதல் நிதியை ஒதுக்க உலக சுகாதார அமைப்பு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தாண்டில் மட்டும் ஆப்பிரிக்காவில் 17 ஆயிரத்திற்கும் அதிகமானோர் குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும், 500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாகவும் அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, கடந்த இரண்டாண்டுகளில் தற்போது இரண்டாவது முறையாக அங்கு சர்வதேச அளவிலான சுகாதார அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இலங்கை அதிபர் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை கொழும்பில் இன்று நடைபெறுகிறது.

பரிசீலனையின் முடிவில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அங்கு, அடுத்த மாதம் 21-ஆம் தேதியன்று தேர்தல் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

18 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மகளிர் **Hand Ball** சாம்பியன் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – பிரேசிலை எதிர்கொள்கிறது.

சீனாவின் **Chuzhou**-வில் இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>>

இந்திய ஹாக்கி வீரர் **Sreejesh** ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளதையடுத்து, அவர் அணிந்த எண்-16 ஜெர்சியை வேறு வீரர்களுக்கு தருவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஹாக்கி சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அது வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜூனியர் ஹாக்கி அணியின் பயிற்சியாளராக **Sreejesh** –ஐ நியமிக்கவும் ஹாக்கி சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

<<<<<<>>>>>>

டொமினிக்கன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – பிரேசிலின் ஃபெர்ணாண்டோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<END>>>>>>